| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பாஸ்கரன் | அ.வ.எண். 263/2015 | 18.03.2024 |

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு ஏ,பி அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 10 சென்ட் ஆகும். வழக்கு ஏ அட்டவணை சொத்து தென் பகுதியில் உள்ளது. வழக்கு பி அட்டவணை அதன் வடபுறத்தில் உள்ளது. வழக்கு ஏ, பி அட்டவணை சொத்திற்கான கிரைய ஆவணம் வா.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ.2 ல் 901 சதுரடி தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மற்றொரு கிரைய பத்திரம் 20.04.1986 ஆகும். மற்றொரு கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யாமைக்கு என்ன காரணம் என்றால் எதுவும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் சவரியம்மாள், குண்டுமணிக்கு கிரையம் செய்த ஆவணமாகும். வா.சா.ஆ.1 ஆவணம் தான் வழக்கு சொத்திற்கான தாய் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மொத்த விஸ்தீரணம் 10 சென்டாகும். வா.சா.ஆ.1 மற்றும் 20.04.1986 பத்திரம் ஆகிய இரண்டும் சேர்த்து தான் மொத்தம் 10 சென்ட் என்றால் சரிதான். ஆரம்பத்தில் வழக்கு சொத்துக்களின் சர்வே எண்.382/3 என்றால் சரிதான். சர்வே எண்.382/3 என்பது புஞ்சையாக வகைபாடு செய்யப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.382/3 ன் மொத்த விஸ்தீரணம் 34 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண்.382/3 என்பது 16/3 ஏ, 16/3b, 16/3c, 16/3d என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவு எப்போது செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.382/3 ஆனது நாளாக உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரும் மொத்த விஸ்தீரணம் 34 சென்ட் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

வழக்கு சொத்துக்களை வழக்கறிஞர் ஆணையர் வந்து பார்வையிட்டு ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ.1, வழக்கறிஞரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 மற்றும் புல வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.16/3 ஏ, 16/3b, 16/3c, 16/3d ஆகியவற்றின் மொத்த விஸ்தீரணம் 37.8 சென்ட் என காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 16/3c, 16/3d ஆகியவை என்னுடையது தான். மேற்படி 16/3 சி மற்றும் 16/3 டி ஆகியவற்றிக்கு வாதி ஜெயலெட்சுமி பெயரில் பட்டா உள்ளது. மேற்படி பட்டாவின் கணினி நகல் **பி.வா.சா.ஆ.1** மற்றும் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.16/3 சி யில் மொத்த விஸ்தீரணம் 4 ஏர்ஸ் என போடப்பட்டுள்ளது. 4 ஏர்ஸ் என்பது 9.88 சென்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ளது 2-1/4 சென்ட் என்றால் சரிதான். எனது வழக்குரையில் பத்தி 9 ல் வழக்கு சொத்திற்கு தெற்கே 12 சென்ட் என் தாயார் 1ம் வாதி ராசுகண்ணு என்பவரிடம் கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையத்தின் மூலம் பெறப்பட்ட 12 சென்ட் தான் சர்வே எண்.16/3 டி என்றால் சரிதான். அதற்கான பட்டா தான் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 5 ஏர்ஸ் என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 5 ஏர்ஸ் என்பது 12.3 சென்ட் என்றால் சரிதான். 0.3 சென்ட் அதிகமாக உள்ளதற்கு பத்திரம் உள்ளதா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.16/3டி ஐ பொருத்து அளவும் 14.9 சென்ட் வருகிறது என்றால் எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 03.04.2024 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.